2023 மார்ச் 31]

86—

நியாய விலைக் கடை

***1340—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *வேளச்சேரி தொகுதி, பேபி நகர், பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்கா அருகில் காலியாகவுள்ள இடத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *வேளச்சேரி தொகுதி, பேபி நகர் மாநகராட்சிப் பூங்கா அருகில் காலியாகவுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், சென்னை மாநகராட்சி நியாய விலைக் கடை அமைக்க அனுமதியளிக்கும்பட்சத்தில், இவ்விடத்தில் நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா அவர்கள்.*

முற்பகல் 10—35

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "Nafrat Chodo, Bharat Jodo". *"இந்தியத் திருநாட்டை ஒன்றிணைப்போம், வெறுப்பு அரசியலை விட்டு தவிர்த்திருப்போம்" என்று* Bharat Jodo yatra *மூலமாக 180 நாட்கள், 3,570 கிலோ மீட்டர், 12 மாநிலங்கள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், காஷ்மீர் என்று இந்தியத் திருநாட்டை தன் கால்களால் அளந்த எங்கள் பாசத் தலைவன் ராகுல் காந்தி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களை வழிநடத்தும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: வேளச்சேரி தொகுதி, பேபி நகர், உதயம் நகர், விரிவாக்கம் பார்க், கரிகாலன் தெரு, வீனஸ் காலனி, பட்டுக்கோட்டை முத்துக்குமாரசாமி தெரு, சேஷாத்ரிபுரம், அனகா தெரு, தத்தா தெரு, பிலிம் தெரு, பாரதி தெரு, கம்பர் தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியாகும். மேலும், அப்பகுதியில் வாழக்கூடிய மக்கள் அனைவருமே senior citizens. இவர்கள் எல்லாம் retired life வாழக்கூடியவர்கள். தரமணி சாலையின் வடக்குப் பகுதியில் இருக்கக்கூடியது பேபி நகர். இந்தப் பகுதியிலுள்ள மக்கள், சாலையைக் கடந்து தெற்கே தரமணிக்கு வந்து தங்களுடைய ரேஷன் பொருட்களை வாங்கிச் செல்லும் நிலைமை இருக்கிறது. இவர்கள் எல்லாம் senior citizens ஆக இருப்பதனால், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அப்பகுதியில் எங்களுக்கு ரேஷன் கடையை அமைத்துத் தர வேண்டும். இதில் ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்வதை உள்வாங்கிக்கொள்ளுங்கள். நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்கப்படுமா என்பதுதானே. மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பதில் சொல்லிய பிறகு, மீண்டும் பேசலாம். (குறுக்கீடு) உங்கள் கேள்வியே அதுதானே?

திரு. JMH. அசன் மௌலானா: பார்க் அருகே ஆவின் பால் பூத் இருக்கிறது. அந்த பார்க் அருகே இன்னொரு ரேஷன் கடையை நீங்கள் கட்டித் தர வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான நிதியை ஒதுக்க நான் தயாராக இருக்கின்றேன். ஆனால், அந்த இடம் நகராட்சி நிர்வாகத் துறையின்கீழ் வருகிறது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை கொடுத்துவிடுங்கள் என்று ஒரு வார்த்தை சொன்னால், நிச்சயம் அப்பகுதியில்

2023 மார்ச் 31]

எங்களுக்கு ரேஷன் கடை வந்துவிடும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதலில், நியாய விலைக் கடை தந்ததற்குப் பிறகுதான் நீங்கள் சொல்வது எல்லாம் வரும். நீங்கள் இப்போதே பிள்ளைக்கு பெயர் வைக்க வேண்டாம். மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேபி நகர் பகுதியிலே நியாய விலைக் கடை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்கின்றார். அது உண்மையிலேயே அந்தப் பகுதி மக்களுக்கு நன்மையாக இருக்கும். சீனிவாசபுரம், விஜயநகரத்தில் இருக்கும் கடையில் 2,208 குடும்ப அட்டைகள் உள்ளன. அதிலிருந்து 910 அட்டைகளைப் பிரித்து புதிய கடையை பேபி நகர் பகுதியில் திறக்க இன்றே ஆணை வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார். இடத்தைத் தேர்வு செய்தால், மாநகராட்சி இடமாக இருந்தாலும் சரி, ஆவின் இடமாக இருந்தாலும் சரி, எந்த இடத்தை நீங்கள் கொடுத்தாலும், அந்த இடத்திலே நியாய விலைக் கடையைக் கட்டுவதற்கு அனுமதி கொடுத்துவிடுகிறோம். அதேசமயத்தில், தண்டீஸ்வரர் கோயில் பகுதியில் உள்ள இரு கடைகளில் ஒன்று, அந்தக் கடையில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அதிகம் வசிக்கும் பகுதியான பேபி நகர் அல்லது டான்சி நகர் பகுதிக்கு மாற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள். நன்றியைத் தெரிவித்துவிட்டு, எவ்வளவு ரூபாய் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்குவீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தருணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு விஷயம் கூறிக்கொள்ள வேண்டும். முதியோர்களிடம் finger print பிரச்சினையெல்லாம் இருந்தது.*

[2023 மார்ச் 31

சமீபகாலமாக அந்தப் பிரச்சினைகளை முற்றிலும் ஒழித்துவிட்டு, அவர்களுக்கு சாதகமாக ரேஷன் கடைகளை நடத்திக்கொண்டு வருகிறீர்கள். அதற்காக உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றியோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: அதேநேரத்தில், சாஸ்திரி நகர், தாமோதரபுரம், அடையாறு பரமேஸ்வரி நகர், ஊரூர்குப்பம், பழண்டி அம்மன் கோயில், பெசன்ட் நகர், திடீர் நகர் ஆகிய பகுதிகளுக்கும் சேர்த்து 7 கடைகள் ஒரே இடத்தில் இருக்கின்றன. இந்த மக்கள் 200 ரூபாய் ஆட்டோ செலவு செய்து, அரசாங்கம் தரும் விலையில்லா பொருட்களைப் பெற்றுச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள கடைகளை நீங்கள் அந்தந்தப் பகுதியில் அமைத்துத் தருவீர்களேயானால், அந்த மக்களுக்கு இந்த விலையில்லா பொருட்களைப் பெறுவதற்கான செலவு இல்லாமல் போகும். அதேநேரத்தில், அருணாச்சலபுரத்தில் ஓர் இடம் இருக்கிறது. அங்கு ஒரு கழிவறை இருந்தது; அது இடிக்கப்பட்டு, இப்போது தரைமட்டமாக இருக்கிறது; அப்பகுதி மக்கள் பிரதான சாலையைக் கடந்து காந்தி நகர் வந்து, ரேஷன் பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையிடமிருந்து இடத்தைப் பெற்று, அருணாச்சலபுரத்தில் ஒரு கடை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். Assistant Commissioner அளவில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார். அவையிலேயே இருங்கள் எங்கும் போய்விடாதீர்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பேபி நகர் பகுதியில் நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்டார். அதற்கு இன்றே அரசாணை வெளியிடப்படும் என்று சொல்லியிருக்கின்றோம். இருந்தபோதிலும், இன்னொரு கடைக்கு 7 பகுதிகளிலிருந்து ஒரே இடத்திற்கு பொதுமக்கள் ஆட்டோவில் வந்து பொருட்களை வாங்கிச் செல்வது சிரமமாக

2023 மார்ச் 31]

இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்தக் கடை, அதில் எத்தனை குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்பதை அவர் எழுதிக் கொடுத்தால், அதற்கும் உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் கடைகளும் பிரித்து அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

தெரு விளக்கு

***52474—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சந்தாபுரம் ஊராட்சி, EBS *நகரில் 5, 6 மற்றும் 7—வது தெருக்களில் மின் கம்பம் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சந்தாபுரம் ஊராட்சி, EBS *நகரில் உள்ள 5—வது, 6—வது மற்றும் 7—வது தெருக்களில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சி மன்றத் தலைவரிடம் இருந்து இதுவரை எவ்வித விண்ணப்பமும் வரப்பெறவில்லை. விண்ணப்பம் வரப்பெற்றால், அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஊராட்சி மன்ற நிருவாகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கான தொகை வழங்கப்பட்டவுடன், மின்*